https://tamileelamarchive.com/

# SOLT

STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS
(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX.)
விசேட வெளியீடு 1 டிசம்பர் 1985

# தமிழ்பகுதிகள்பறிபோகும்நிலை!

# போர்நிறுத்தம் கேலிக்கூத்து!!"


## 23 நாள்சுற்றுவிஜயத்தின்பின்

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர்

## நெடுமாறன் அறிக்கை

(3ம் பக்கம்)

**THERE IS NO SUBSTITUTE TO TAMIL EELAM**



யாழ்ப்பாணத்தில் நெடுமாறன்

மாறுவேடத்தில் இலங்கைக்குச் சென்று மூன்று வாரங்களுக்குமேல் தங்கி, இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை நேரடியாகக் கண்டறிந்து திரும்பியுள்ள தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் அவர்களை, 'பத்துக் கேள்விகள்' பகுதிக்காக அவருடைய சொந்த ஊரான மதுரைக்குச் சென்று சந்தித்தேன்.

இதயம்: நவம்பர் (17-23) 1985 பேட்டி: ஸ்ரீராம்

**கேள்வி 1 :** மகாத்மா காந்தி, காமராஜர் போன்ற தலைவர்களின் வழியில் வந்த நீங்கள், 'விசா' இல்லாமல் இலங்கைக்குச் செல்வது சட்டத்திற்கு விரோதமானது என்று தெரிந்தும் இப்படிச் செய்யலாமா? அங்கு போய்வந்ததால் நீங்கள் சாதித்தது என்ன?

**பதில்:** எந்த நோக்கத்திற்காகப் போனேன் என்பது தான் முக்கியமே தவிர, எப்படிப் போனேன் என்பது அல்ல. இலங்கைக்கு நேரில் சென்று, அங்குள்ள தமிழீழத் தலைவர்களையும்—விடுதலைப் போராளிகளையும் சந்தித்து, அங்குள்ள உண்மையான நிலைமைகளைக் கண்டறிந்து, இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் போனேன். நான் 'விசா' வாங்கிக் கொண்டு போவதற்கு இலங்கை அரசு நிச்சயமாக அனுமதிக்காது. எனவேதான் 'விசா' இல்லாமல் போனேன். இதில் ஒன்றும் தவறு இல்லை. இதற்கு முன்னால் ஜெயபிரகாஷ் நாராயண் நேபாளத்தில் மன்னர் ஆட்சியில் பிரச்சினைகள் இருந்தபோது, இதேபோல்தான் சென்றுவந்து ஜவஹர்லால் நேருவிடம் உண்மைகளை எடுத்துச் சொன்னார். கோவாவில்

தொடர்ச்சி 2ம் பக்கம்..

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/





நெடுமாறன் அவர்கள்

பிரச்சினைகள் வந்தபோதும், லோகியா இதேபோல் தான் மாறுவேடத்தில் சென்றுவந்து, நிலைமைகளை நேருவிடம் எடுத்துச் சொன்னார். அதன்பேரில், இந்திய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க முடிந்தது. நமது தேசியத்தலைவர்கள் காட்டிய வழியில்தான் நான் சென்றேன். இது ஒன்றும் தேசியத்திற்கு விரோதமானது அல்ல.

**கேள்வி 2 :** மாறுவேடத்தில் சென்ற உங்களை அங்குள்ளவர்கள் அடையாளம் கண்டுபிடிக்கவில்லையா? சிங்களவர்கள் கண்டுபிடித்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?

**பதில் :** அங்குள்ள தமிழ்மக்கள் அடையாளம் கண்டுபிடித்து விட்டார்கள். வேறுயாரும் கண்டுபிடிக்கவில்லை. ஒருவேளை வேறு யார் கண்ணிலாவதுபட்டால், திரும்பி வராமலே போகக்கூடும் என்று தெரிந்துதான் போனேன். எந்த நிலைமைக்கும் தயாராகத்தான் இருந்தேன்.

**கேள்வி 3 :** உங்கள் மனதை உலுக்கிய சம்பவங்கள் எதையாவது பார்த்தீர்களா?



தமிழகமுதல்வர் எம்.ஜி.ஆர் உடன் தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

**பதில்:** எந்தப் பிரச்சினையிலும் சம்பந்தப்படாமல், விவசாயம் போன்ற தொழிலில் ஈடுபட்டிருந்த அப்பாவித் தமிழ் இளைஞர்களையெல்லாம் இலங்கை இராணுவத்தினர் வீட்டிலிருந்து இழுத்துப்போட்டு சுட்டிருக்கிறார்கள். அவர்களின் இளம்மனைவிகளை எல்லாம் விதவைக் கோலத்தில் பார்த்தேன். வாழ்வில் வசந்த காலத்தை அனுபவிக்க வேண்டியவர்கள் எல்லாம் கொல்லப்பட்டிருக்கிறார்கள். செல்வம்மிகுந்த குடும்பத்தில் உள்ளவர்கள்கூட உயிருக்குப் போராடிக் கொண்டு காடுகளிலும், மேடுகளிலும் வசித்து வருகிறார்கள். அங்குள்ள பெண்கள் மாற்று உடைகூட இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வேதனையான காட்சிகளை 'வீடியோ டேப்'பில் பதிவு செய்து எடுத்து வந்திருக்கிறேன்.

**கேள்வி 4 :** விடுதலைப்புலிகளிடமிருந்து வரும் அறிக்கைகளை நம்பாமல் தான் இலங்கைக்குச் சென்றீர்களா?

**பதில்:** விடுதலைப்புலிகளின் உதவியுடன் – அவர்களின் பாதுகாப்போடுதான் சென்று வந்தேன். இலங்கையில் உள்ள தமிழர்கள் அங்கு நடப்பதைச் சொல்வதைவிட, இந்தியாவிலிருந்து ஒருவர் நேரில் சென்று வந்து எடுத்துச் சொன்னால் மக்களுக்கு இன்னும் நம்பிக்கை பிறக்கும்; தெளிவான விவரமும் கிடைக்கும் என்று நினைத்துதான் போனேனேதவிர, விடுதலைப்புலிகளை நம்பாமல் போனேன் என்ற பேச்சுக்கே இடமில்லை.

**கேள்வி 5 :** இலங்கைப் பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்று உலகத்தலைவர்கள் எல்லோரும் சொல்கிறார்களே... இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** நம் பக்கத்து வீட்டில் கணவன் – மனைவி இருவருக்கும் சாதாரண தகராறு நடந்தால் நாம் அதில் தலையிட முடியாது. அது அவர்களுடைய சொந்தப் பிரச்சினை. ஆனால் கணவன் அவளை கொலை செய்ய முயற்சி செய்யும்போது நாம் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதோ அல்லது அது அவர்களுடைய சொந்த விஷயம் என்று விட்டு விடுவதோ நல்லதல்ல. அது கோழைத்தனமானது! அதைப்போலத் தான் இலங்கையில் உள்நாட்டு பிரச்சினை என்று சொல்வதுமாகும். அங்கே துன்புறுத்தப்படுவது நம் சகோதரர்களும்—சகோதரிகளும். இது எப்படி இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை ஆகும்?

**கேள்வி 6:** ராஜீவ் காந்தியால் இலங்கைப் பிரச்சினையை முழுவதுமாகத் தீர்க்க முடியும் என்கிறீர்களா? இந்திய அரசாங்கம் இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று கூறப்படுவதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** ராஜீவ் காந்தியால் இந்த பிரச்சினையைத்தீர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன். இராணுவத்தை அனுப்புவதுகுறித்து நான் ஏதும் அபிப்பிராயம் சொல்வதற்கில்லை. இலங்கையில் உள்ள மக்கள் தனிநாடு கேட்பதாகச் சொல்வது தவறு. இது உரிமைப் போராட்டம். முப்பத்தைந்து வருடத்திற்கு மேலாக அங்குவாழும் தமிழர்கள் தங்களின் உரிமைகளைக் கேட்கிறார்கள் என்ற கண்ணோட்டத்தில்தான் பார்க்க வேண்டும். ஆனால், இலங்கை அரசு எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. தமிழர்களின் நியாயமான அடிப்படை உரிமைகளைப் பறித்துக் கொண்டு இனவெறி ஆட்டம் போடுகிறது. அதன் பலனாக, பல்லாயிரம் பேர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஐயாயிரம் பேர் சிறைபிடிக்கப் பட்டிருக்கிறார்கள். ஒருலட்சத்து இருபதாயிரம் பேர் அகதிகளாக்கப் பட்டிருக்கிறார்கள். தென்னாப்பிரிக்காவில் நடைபெறுகின்ற இனவெறிக்கும் இலங்கை அரசின் வெறிக்கும் வித்தியாசமில்லை. ஹிட்லர், முசோலினி போன்றவர்களின் கொள்கையைத்தான் இலங்கை அரசு கடைப்பிடிக்கிறது. இதன் விளைவு அழிவுதான்!

**கேள்வி 7:** இப்பொழுது நடைபெறும் பேச்சுவார்த்தையில் ஒரு சுமுகமான தீர்வு ஏற்பட்டால் தமிழ்ஈழம் வேண்டாம் என்று விட்டு விடுவீர்களா? தமிழர்கள் சிங்களவர்களுடன் ஒற்றுமையாகப் போவார்களா?

**பதில்:** தமிழ்ஈழம் வேண்டும், வேண்டாம் என்று நாங்கள் சொல்ல மாட்டோம். தனிப்பட்ட முறையில் யாரும் எந்த கருத்தையும் அவர்கள் மீது திணிக்கக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். தமிழ் மக்கள் எதை விரும்புகிறார்களோ அதைப் பெற்றுத் தருவதற்கு நாங்கள் போராடுவோம்.

**கேள்வி 8:** மகத்தான காங்கிரஸ் பாரம்பரியத்தில் – கிட்டத்தட்ட காமராஜருக்குப் பின் – வந்த இளைய தலைமுறையில் நம்பிக்கைக்குரிய தலைவராகத் தோன்றிய தாங்கள் – தங்கள் செயல்களை 'டெசோ' நடவடிக்கைகளில் குறுக்கிக் கொள்ளலாமா?

தொடர்ச்சி 16ம் பக்கம்

# தமிழீழ விடுதலையை இந்திய அரசு அங்கீகரித்திட வேண்டும்!

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



## தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன்

## அறிக்கை

இலங்கையில் உள்ள தமிழர் பகுதிகளில் சுமார் 23 நாட்களில் சுற்றுப் பயணம் செய்தேன். யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை உட்பட தமிழர் வாழும் பகுதிகளில் தரை வழியாக சுமார் 1200 மைல்களும் கடல் வழியாக சுமார் 300 மைல்களும் பயணம் செய்தேன். எனது பயணத்திற்கும், பாதுகாப்பிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் உதவி புரிந்தார்கள்.

மதத் தலைவர்கள், அரசு அதிகாரிகள், டாக்டர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள், பிரமுகர்கள், பிரஜைக் குழுக்கள், மாதர் அமைப்புக்கள், போராளிகளின் சகல இயக்கங்களின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோரை சந்தித்துப் பேசினேன்.

**போர் நிறுத்தம்:-**

போர் நிறுத்தம் ஒரு மோசடியே. இதைப் பயன்படுத்தி சிங்கள இராணுவம் தமிழர்களை வேட்டையாடுகிறது. குறிப்பாக கிழக்கு மாநிலப் பகுதியிலிருந்து தமிழர்களைவிரட்டியடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் இராணுவம், கடற்படை, விமானப்படை, அதிரடிப்படை முதலியவை ஏவி விடப்பட்டுள்ளன. தமிழர்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்.

இம்மாவட்டங்களில் இருந்து சுமார் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். அதைப்போலவே வவுனியா பகுதியிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அகதிகள் வெளியேறி வருகின்றனர்.

டிராக்டர்களிலும், மாட்டு வண்டிகளிலும், படகுகள் மூலமும், நடந்தும் அகதிகள் சாரி சாரியாக வருவதை நானே நேரில் பார்த்தேன்.

பல அகதிகள் முகாம்களுக்கும் நேரில் சென்று பார்த்து விசாரித்து ஆறுதல் கூறினேன்.

பல்வேறு மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்களும் அவற்றில் உள்ள அகதிகளின் எண்ணிக்கையையும் கீழே தந்துள்ளேன்.

| மாவட்டம் | அகதி முகாம்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 32 | 26,000 |
| முல்லைத்தீவு | 17 | 8,355 |
| மன்னார் | 4 | 4,313 |
| கிளிநொச்சி | 4 | 3,472 |
| திருகோணமலை | 27 | 48,350 |
| தாளையடி | 2 | 260 |
| வவுனியா | 17 | 4,844 |
| பெரியவிழான் | 1 | 298 |
| | 104 | 95,892 |

இவர்களைத் தவிர உறவினர் வீடுகளில் சுமார் 20,000 பேர் தஞ்சம் புகுந்திருப்பார்கள்.

போர் நிறுத்தத்திற்குப் பிறகு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அகதிகளாகி இருக்கிறார்கள். அதற்கு முன்பு அகதிகளானவர்கள் தொகையும் இந்த அளவு இருக்கும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



அகதி முகாம்களில் இருப்பவர்களுக்கு அரசு உதவி என்பது மிக அற்பமானது. பெரும்பாலானவர்களுக்கு அதுவும் கிடையாது. விடுதலைப்புலிகளும், மற்ற பொது அமைப்புகளும் மக்களும்தான் அகதிகளுக்கு உதவி செய்து வருகிறார்கள்.

அகதிகளில் பெரும்பாலோர் இந்திய வம்சாவழித் தமிழர்கள். 1977,1983 கலவரங்களில் பாதிக்கப்பட்டு மலையகப் பகுதியில் இருந்து வெளியேறி வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில குடியேறி காடுகளைத் திருத்தி விவசாயம் செய்து வாழ்ந்த மக்கள் விரட்டியடிக்கப்பட்டு இரண்டாம் முறையாக அகதியளாகியுள்ளார்கள். சிலர் மூன்றும் முறை அகதிகளாயுள்ளனர். அதிகாரிகள் யாரும் வருவதில்லை. இலங்கை தமிழ் அமைச்சர்கள் ஒருவரும் இதுவரை எந்த அகதி முகாமையும் பார்க்க வரவில்லை.

<u>இராணுவ அட்டூழியங்கள்</u>:-

சிங்கள இராணுவம் பயங்கரவாதிகள் மீது போர் தொடுத்திருப்பதாகக் கூறுகிறது. ஆனால் உண்மையில் தமிழ் மக்கள் மது போர் தொடுத்துள்ளது..

ஒன்றுமறியாத அப்பாவி மக்களை, வயதானவர்கள், பெண்கள், குழந்தைகளைக் கூட சுட்டுத்தள்ளுகிறது.

விவசாயம் செய்ய விடாமல் தடுக்கிறது. விவசாயக் குளங்களை நாசம் செய்கிறது.

விவசாயிகளுக்குத் தேவையான டீசல், உரம் போன்றவை கிடைக்காமல் தடுக்கிறது.

கரையோரத்தில் மீன் பிடித் தொழில் செய்யும் மீனவர்களைத் தடுக்கிறது. மீறிச் சென்றால் சுட்டுத்தள்ளுகிறது.

விவசாயம் செய்யும்போது, மீன் பிடிக்கும்போது ஹெலிகாப்டரில் இருந்து சுடுகிறது. கல்லூரிகள்-பள்ளிகள் இயங்க அனுமதிப்பதில்லை.

தமிழர் வீடுகளில் புகுந்தால் விலை உயர்ந்த பொருட்களை அள்ளிச் செல்கிறார்கள். வந்தவுடன் அவர்கள் கேட்பது காஞ்சிப் பட்டு, நகை இருக்கிறதா? என்பதுதான்.

அம்பாறை மத்திய இராணுவ முகாமில் தமிழ்ப் பெண் நிர்வாணமாக்கப்பட்டு யாரும் பார்க்க அனுமதிக்கப்பட்டது. பலநாள் தொடர்ந்து இது நடந்தது.

தரை வழியாக இராணுவம் வர பயப்படுகிறது. அப்படியே வந்தாலும் 20 அல்லது 40 கவச வாகனங்களில்தான் வரவேண்டியுள்ளது. அதுவும் பாதுகாப்பாக இல்லை. எனவே ஆகாய மார்க்கமாக ஹெலிகாப்டரில் பறந்து வந்து மக்களைச் சுடுகிறார்கள்.

கரையோர கிராமங்களை கடலுக்குள் 2 மைல்களுக்கு அப்பால் இருந்து பீரங்கிகள் மூலம் சுடுகிறார்கள். கரையில் வந்திறங்கும் துணிவு அவர்களுக்கு இல்லை.

எல்லையோர கிராமங்களில் ஊர்க்காவல் படையும், இராணுவமும் மாறி மாறித் தாக்குகிறார்கள்.

<u>ஊர்க்காவல் படை</u>:-

ஊர் காவல் படை என்ற பெயரில் சிங்கள குண்டர்கள் சிறையிலிருந்து தண்டனை பெற்ற குற்றவாளிகள் ஆகியோருக்கு துப்பாக்கிகள் தரப்பட்டுள்ளன. இவர்களுக்கு மொசாட் பயிற்சி அளிக்கிறது. கிராமங்களைக் கொளுத்துகிறது, தாக்குவது, கொலை, கொள்ளை, கற்பழித்தல் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள்.

விசேஷ சித்திரவதை முறைகளிலும் இவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது.

<u>இராணுவ நிலை</u>:-

- மன்னார், வவுனியா, முல்லைத் தீவு போன்ற மாவட்டங்களில் இராணுவம் நகரங்களையோ அல்லது முகாம்களையோ விட்டு வெளியேற இயலாது. கிராமங்கள் புலிப்படை வசமே உள்ளன.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



தாலுகா, கிராம மட்ட அதிகாரிகள் புலிகளுடன் ஒத்துழைக்கிறார்கள். புலிகள் நடமாட்டம் பற்றிய தகவல்களைத் தரவேண்டும் என இராணுவம் கட்டளையிட்டிருந்தாலும் அவர்கள் தருவதில்லை. இராணுவ நடமாட்டம் இருந்தால் பொதுமக்களே புலிகளுக்கு எச்சரிக்கை செய்கிறார்கள்.

<u>புதிய இராணுவ முகாம்கள்</u>:-

கிளிநொச்சியில் பொலீஸ் நிலையத்துக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறி ஊர்ப் பொதுச் சந்தைக் கட்டிடத்தை இராணுவம் இடித்துத் தரைமட்டம் ஆக்கியுள்ளது.

பருத்தித் துறையில் புகழ்பெற்ற கல்லூரிகளான உறாட்லி கல்லூரி, மெதடிஸ் பெண்கள் கல்லூரி ஆகியவற்றை இராணுவம் கைப்பற்றி இராணுவ முகாம்களாக மாற்றி விடத் திட்டமிட்டுள்ளது.

மட்டக்களப்பு வலை இறவு நகருக்குள் விமானதளம் அமைக்க 200 தமிழர்கள் மற்றும் முஸ்லீம்கள் வீடுகள் இடிக்கப்பட்டன.

வவுனியாவில் புதிய விமான தளம் அமைக்க நகரின் மையப்பகுதி சுவீகரம் செய்யப்பட்டுள்ளது. 18 பெரிய அரிசி ஆலைகளும், 200க்கு மேற்பட்ட கடைகளும் ஏராளமான தமிழர் வீடுகளும் இடித்துத் தரைமட்டம் ஆக்கப்படுகின்றன.

<u>போர் நிறுத்தம் ஏற்பட்ட 18.6.'85க்குப் பின் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களின் பட்டியல்</u>:-

| <u>மாவட்டம்</u> | <u>முகாம்கள் உள்ள இடங்கள்</u> |
|---|---|
| அம்பாறை | 1. அக்கரைப்பற்று |
| | 2. கோமாரி |
| மட்டக்களப்பு | 1. பெல்லாவழி |
| | 2. கும்பர் மலை |
| | 3. மாங்கேணி |
| | 4. மகிழம்பட்டி |
| திருகோணமலை | 1. வெல்கம் விகாரை |
| | 2. குச்சவெளி |
| | 3. தெகிவத்தை |
| | 4. சேருவலை |
| | 5. சேனாதுவரை |
| | 6. சிறீமாபுர |
| முல்லைத் தீவு | 1. ஒட்டிசுட்டான் |
| | 2. கொக்கிளாய் |
| | 3. நாயாறு |
| யாழ்ப்பாணம் | 1. நாவற்குழி |
| | 2. பூநகரி |
| | 3. [illegible]னாறு |
| | 4. யாழ்கோட்டை |
| | 5. பருத்தித் துறை |
| மன்னார் | 1. பேசாலை |
| | 2. தலைமன்னார் |
| | 3. மன்னார்கோட்டை |
| | 4. சிலாவத்துறை |
| | 5. செட்டிகுளம் |
| வவுனியா | 1. வவுனியா விமான தளம் |
| | 2. வன்னிக்குளம் |
| | 3. கந்திரிமலை |
| | 4. பனிசாலை |

போர் நிறுத்தம் ஏற்பட்ட 4 மாத காலத்தில் 29 இடங்களில் புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பழைய முகாம்கள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழர் பகுதியில் 10 மைல்களுக்கொரு இராணுவ முகாம் அமைக்க இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/


போர் நிறுத்த காலத்தில் சுமார் 5000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டுள்ளனர்
சுமார் 2000 பேர்கள் வரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

போர் கண்காணிப்புக் குழு :-

போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவில் உள்ள ஒரு தமிழரான சிவநாதன் எந்த அடிப்படையில் இக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது தெரிய வந்தில்லை.

இலங்கை பாதுகாப்புத் துறையின் செயலராக உள்ள செப்பால ஆட்டிகல என்பவருக்கு இவர் வகுப்புத் தோழர். இவருக்கு தமிழே சரிவர பேசத்தெரியாது. சிங்களரின் நம்பிக்கைக்கு உரியவர். அந்த ரீதியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்குழுவில் அங்கம் வகிக்கும் நீதிபதி ரோட்டரிகோ என்பவர் தீவிரமான சிங்கள வெறியர். தமிழரை அடியோடு விரட்ட வேண்டும் என்று கூறுபவர். கண்காணிப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர் ஒருவரை பயங்கரவாதிகளின் பிரதிநிதியாக வந்திருப்பவர் எனக்குற்றம் சாட்டியவர்.

கண்காணிப்புக் குழுவில் உள்ள தமிழர்கள் இரகசியப் போலிசாரால் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறார்கள். அவர்களது டெலிபோன்கள் ஒட்டுக் கேட்கப்படுகின்றன. அவர்களின் பாதுகாப்பே கேள்விக்குறியாகி உள்ளது.

திருகோணமலை சென்ற கண்காணிப்பு குழுவினர் மீது ஊர்க்காவல் படையினர் வெடிகுண்டுகளை வீசினார்கள்.

போர் நிறுத்தத்திற்கும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட இராணுவம் மேற் கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் சம்பந்தமில்லை. பயங்கரவாதிகளை வேட்டையாடுவதை ஒருபோதும் நிறுத்தமாட்டோம் என இராணுவத் தளபதி கண்காணிப்புக் குழுக் கூட்டத்திலேயே தெரிவித்துவிட்டார்.

குழுவின் கூட்டங்களில் இலங்கை உளவுத் துறையின் தலைமை அதிகாரி கலந்து கொள்கிறார். இதை யாரும் தடுக்க முடியவில்லை.

போர் நிறுத்தம் எந்த அடிப்படையில் ஏற்பட்டது? அதற்கான நிபந்தனைகள் என்ன என்று கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் கேட்டபோது அமைச்சர் லலித் அதுலத் முதலி " அதைப்பற்றி கேட்க உங்களுக்கு அதிகாரம் இல்லை. உங்களுக்குள்ள பணிகள் கீழ் கண்டவை மட்டுமே" என்று கூறியுள்ளார்.

1. தனி நபர்களின் புகார் மனுக்களை ஏற்றல், விசாரித்தல்.
2. அகதிகளை மீண்டும் அவர்களின் வீடுகளில் குடியேற்றல்.
3. சிறையில் உள்ளவர்களைக் காண உறவினர்களுக்கு வசதி செய்து கொடுத்தல்.
4. சிறையில் உள்ளவர்களைக் கண்டு அவர்களின் நிலையறிதல்.

கண்காணிப்புக்குழுவில் சிங்களர் 6 பேர், தமிழர் 3 பேர், முஸ்லீம்கள் 2 பேர் உள்ளனர். தமிழர்களில் ஒருவர் அரசு ஆதரவாளர். சிங்களரையும் அவர்களது ஆதரவாளர்களையும் பெரும்பான்மையாகக் கொண்ட இக்குழு நேர்மையுடன் செயல்படாது எனத் தமிழர்கள் கருதுகின்றனர்.

இக்குழுவின் நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பே என்று மக்கள் கருதுகின்றனர்.

பூசா சிறைக் கைதிகள் முகாம் :-

விடுதலையானவர்கள் விவரிக்கும் நிகழ்ச்சிகள் நெஞ்சை நெகிழவைப்பதாகும் பல பகுதிகளில் சுமார் 30க்கும் மேற்பட்டவர்களைச் சந்தித்தேன்.

வல்வெட்டுத்துறைப் பகுதியில் மட்டும் மொத்தம் 350 பேர்களுக்குமேல் கைது. கிட்டத்தட்ட இரண்டுகாலம் சிறைவாசம். பூசா சிறைக்கு கொண்டுபோவதற்கு முன்பாக இராணுவச் சிறைகளில் வெளியில் சொல்ல முடியாத கொடூரமான சித்திரவதைகள் இழைக்கப்பட்டன. கடைசியாக கொழும்புக்குக் கொண்டுபோய் அங்கும் அடி உதைகளுக்கு ஆளாகி பிறகு பூசா முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



கொழும்பு நகரிலிருந்து பூசாவிற்கு 1½ மணி நேரத்தில் போய்விடலாம். ஆனால் இந்த இளைஞர்களைக் கொண்டு செல்ல 1½ நாள் ஆகியுள்ளது. சிங்கள ஊர்களுக்கெல்லாம் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். கைகள் கட்டப்பட்ட நிலையில் லாரிகளில் அழைத்துச் செல்லப்பட்ட இந்த இளைஞர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் என்றும் இராணுவம் வெற்றிகரமாக இவர்களை வளைத்துப் பிடித்துவிட்டது என்றும் பொய்ப்பிரச்சாரம் செய்தனர். இதைக் கேட்ட சிங்களர் வெறி கொண்டு ஆயுதங்களுடன் தாக்கினார்கள். பலர் தாக்கப்பட்டு காயமடைந்தனர். இரத்தம் சொட்ட சொட்ட பூசா முகாமுக்குக் கொண்டு வரப்பட்டனர். இதில் எத்தனை பேர் இறந்தனர். என்பது தெரியவில்லை.

சிறை முகாமில் உணவு மகா மட்டம். அதுவும் அரை வயிற்றுக்குத்தான் கொடுத்தார்கள். கக்கூசில் உபயோகிக்கும் தண்ணீரைத்தான் குடிக்கவேண்டும். 900 பேர் இருந்த அந்த சிறையில் நூறு பேருக்கு மேல் அம்மை நோய் கண்டது. அவர்களுக்கு சிகிச்சையோ தனி இடமோ கிடையாது.

ஒருவர் சாப்பிட்ட தட்டிலேயே மற்றவர் சாப்பிடவேண்டும் என்ற நிலையில் நோய் வேகமாகப் பரவியது. பலர் இறந்தனர்.

மருந்து கேட்டால் இந்தியாவில் இருந்து வந்து கொண்டிருக்கிறது. எனக் கேலி செய்தார்கள்.

இந்திரா இறந்தபோது சொல்ல முடியாத வார்த்தைகளால் திட்டினார்கள். இந்திரா இறந்ததைக் கொண்டாடினார்கள்.

ஈழம் வேண்டாம்! இந்தியா வேண்டும்! என காதுகளை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு கத்திக் கத்திச் சொன்னால்தான் மல-ஜலம் கழிக்க அனுமதித்தார்கள்.

நாய்களுக்கு தமிழர் தலைவர்கள் பெயரிட்டு அழைத்தார்கள்.

சிறையிலிருந்த பெண்களை முழு நிர்வாணமாகவே வைத்திருந்தார்கள். விரும்பிய போதெல்லாம் கற்பழித்தார்கள்.

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் வந்தபோது உண்மைகளைக் கூறியவர்களை பிறகு சித்திரவதை செய்தார்கள்.

சிறையில் உள்ளவர்களுக்கு மாற்றுடை கிடையாது. எந்த உடையோடு சிறைக்கு வந்தார்களோ அதே இரத்தக் கறை படிந்த உடைகளோடுதான் இருந்தார்கள்.

பயங்கரவாதிகள் தடைச் சட்டப்படி ஒருவர் கைதானால் 18 மாதங்கள் வரை வைத்திருக்கலாம். அதற்கு மேலும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை என்றால் விடுவிக்கவேண்டும். ஆனால் கைது செய்து பல்வேறு இராணுவ முகாம்களில் பல மாதம் வைத்திருந்து சித்திரவதை செய்து பிறகு சிறையில் அடைக்கிறார்கள். இராணுவ முகாம்களில் இருந்த காலத்தை கணக்கில் சேர்ப்பதில்லை. சிறையில் வைத்த நாள் முதல்தான் கணக்கிடுகிறார்கள்.

இலங்கை சிறைச்சாலைகளுக்கான ஆலோசனைக் குழு உறுப்பினரான அமரசிங்கா என்பவர் சிறைக் கொடுமைகளைக் கண்டு மனம் நொந்து செப்டம்பர் மாதத்தில் இராஜினாமா செய்து விட்டார்.

நிருவாகம் :-

சிவில் நிர்வாகம் முற்றிலுமாக இல்லை. மாவட்டத் தலைநகரங்களில் பெயரளவுக்கு மாவட்ட அதிகாரிகள் உள்ளனர். கிராமப்புற பகுதிகளில் ஆட்சி போல இல்லை. தமிழர் பகுதிகளில் 2 ஆண்டு காலமாக யாரும் எந்த வரியும் கட்டுவதில்லை. அரசு அதிகாரிகளும் வசூலிப்பது இல்லை! வரி கட்டுவதில்லை! என்ற உறுதியோடு மக்கள் இருக்கிறார்கள்.

அரசு திட்டங்களும் கிடையாது. சாலை பராமரிப்பு, குளங்கள் மராமத்து போன்ற வேலைகள் 2 ஆண்டு காலமாக கிடையாது.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



தமிழ்ப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணம் அனைத்தையும் பாதுகாப்பு நிதிக்கு அரசு பயன்படுத்துகிறது. நீதி மன்றங்கள் அறவே இயங்கவில்லை.

<u>செய்தித் தொடர்பு</u>:-

டெலிபோன் அறவே கிடையாது. யாழ் நகரில் மட்டும் உள்ளூரில் பேசிக் கொள்ள வசதி உண்டு. வெளி இடங்களுக்கு பேச முடியாது. தபால் போக்குவரத்து மிக அபூர்வம். தப்பித் தவறி கிடைப்பதும் தான் உண்டு. தபால் அலுவலகங்களை தாக்கி தபால் பைகளை இராணுவம் நாசம் செய்கிறது. இலங்கை வானொலி ஒலிபரப்பும் செய்திகளை மக்கள் நம்புவதில்லை. பத்திரிகைகள் கண்காணிக்கப்படுகிறது.

<u>விவசாயிகளின் நிலை</u>:-

தமிழர் பகுதியில் இருந்துதான் உருளைக் கிழங்கு, வெங்காயம், மிளகாய் புகையிலை போன்ற பொருட்கள் சிங்களர் பகுதிக்கு அனுப்பப்படுவது வழக்கம். கடந்த இரு ஆண்டுகளாக இவற்றை அரசு நிறுத்திவிட்டது. பதிலுக்கு இந்தியாவி-லிருந்து இவற்றை இறக்குமதி செய்கிறது.

1983-ம் ஆண்டில் தமிழ் விவசாயிகளுக்கு அரசு அளித்த பாக்டிரியா கிருமி-களால் பாதிக்கப்பட்ட உருளை விதைகளை அப்பி அதன் மூலம் ஒரு முளைப் பயிர் 30 நாட்களில் வாடி அழிந்து விட்டது. அப்போது பரவிய வாடல் நோய் இன்னும் மறையவில்லை, பரவிக் கொண்டே உள்ளது. இதைத் தவிர்க்க அரசு எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை.

<u>நீர்ப்பாசனம்</u>:-

ஏற்று நீர்ப்பாசனம் என்னும் முறையில் ஆறுகளிலிருந்து பம்புகள் மூலம் அரசே நீர் இறைத்து அளித்தது. 3 ஆண்டு காலமாக அவை நிறுத்தப்பட்டுவிட்டன. அந்த நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன.

வவுனிக்குளம் போன்ற பெரிய குளங்கள் செப்பனிடப்படாததால் தண்ணீர் தேங்குவதில்லை. வீணாகிறது. இராணுவமே மதகுகளை உடைத்து நீரைவெளியே பாயும்படி செய்துள்ளது. விவசாயிகள் பயிர் செய்ய அனுமதி இல்லை. மீறிப் பயிரிட்டால் பயிர்களை அழிக்கிறார்கள். எல்லையோர கிராமங்களில் தமிழர் பயிர் செய்த நிலங்களை இராணுவ உதவியுடன் சிங்களர் அறுவடை செய்து செல்கிறார்கள்.

<u>அரசு திட்டமிட்டு உணவு உற்பத்தியை அழிக்கிறது. பருவ நிலையை உருவாக்கி தமிழர்களைப் பட்டினியால் சாகடிக்க திட்டமிட்டுள்ளது.</u>

<u>வணிகர் நிலை</u>:-

தமிழர் பகுதிகளில் வணிகம் பெருமளவு பாதிப்பு. 10% வணிகம் மட்டுமே நடைபெறுகிறது. லாரி, இரயில் போக்குவரத்து இல்லாததாலும், இராணுவம் கொள்ளையடிப்பதாலும் வியாபாரம் பாதிக்கப்பட்டுவிட்டது. மக்களும் அத்தியா. வசியமான பண்டங்களை மட்டுமே வாங்குகிறார்கள். ஆடம்பர பொருட்களை வாங்குவதில்லை.

வருமான வரி, விற்பனை வரி மற்ற வரிகளை எந்த வணிகரும் கட்டுவதில்லை.

<u>வங்கிகள்</u>:-

எந்த வங்கியாக இருந்தாலும் ரூ3000/-க்கு மேல் சேவிங்ஸ் கணக்கில் எடுக்க முடியாது. அதுவும் எல்லா வங்கிகளிலும் எடுக்க முடியாது.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



யாழ்ப்பாணம் கோட்டையில் உள்ள கிளை வங்கியில் மட்டும்தான் பணம்போடவோ வாங்கவோ முடியும்.

மன்னார், கிளிநொச்சி, பருத்தித்துறை போன்ற இடங்களில் இராணுவ முகாம்களில் உள்ள வங்கிகளில் மட்டுமே பணம் வாங்க முடியும். தமிழர்பகுதிகளில் உள்ள வேறு எந்த வங்கிக் கிளைகளிலும் நகையோ பணமோ கிடையாது.

அடகு நகைகள்:-

தமிழர் பகுதிகளில் விவசாயிகளும் மற்றவர்களும் கடன் வாங்குவதற்காக சுமார் ரூ 200/- கோடி பெறுமான நகைகளை அடகு வைத்துள்ளனர். இந்த நகைகளை பாதுகாப்பு காரணம் காட்டி கொழும்புக்கு அரசு எடுத்துச் சென்று விட்டது.

கடன்கள் திரும்பச் செலுத்தப்பட்ட பிறகும் அந்த நகைகளைக் கொடுக்க அரசு மறுக்கிறது.

" போராளிகள் ஆயுதம் வாங்க அந்தத் தங்கம் பயன்படும் எனவே அதைத் தரமாட்டோம்" என அரசு அறிவித்துவிட்டது.

இதை எதிர்த்து மக்கள் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்:-

தமிழர் பகுதிகளில் சிறப்பாக இயங்கிய பல நோக்குக் கூட்டுறவுசங்கங்கள் முழுவதுமாகச் செயலற்று விட்டன. சங்கக் கடைகளை இராணுவம் கொள்ளை அடிக்கிறது. சங்க அலுவலர்கள் சுடப்படுகிறார்கள். கைது செய்யப்படுகின்றனர். வெளியில் இருந்து பொருட்களை விற்பனைக்காக கொண்டு வர முடியவில்லை. 2 ஆண்டுகளில் பெரும் நஷ்டம். ஊழியர்களும், ஊதியம் தருவதற்காக சங்க சொத்துக்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தளவாடச் சாமான்கள் விற்கப்படுகின்றன.

1977க்குப் பிறகு தமிழர் பகுதிகளில் விவசாயக் கடன்கள் அறவே நிறுத்தப்பட்டுவிட்டன.

மீனவர்கள்நிலை:-

தமிழர் பகுதிகளில் விவசாயத்திற்கு அடுத்த பெரிய தொழில் மீன் பிடிப்பது. கடல் பாதுகாப்பு வளையம் என்ற பெயரில் கடலில் மீன் பிடிப்பதை அரசு தடுத்து விட்டது. கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடற்படையால் தாக்கப் படுகிறார்கள். ஹெலிகாப்டர்கள் மூலம் சுடப்படுகிறார்கள். கடலோர கிராமங்களை கடலில் இருந்து பீரங்கிகள் மூலம் சுட்டு அழிக்கிறார்கள். கடலோர கிராமங்கள் அநேகமாகக் காலி செய்யப்பட்டுவிட்டன. கிளிநொச்சிப் பகுதியில் இருந்து திருகோணமலைக்கு கடலோரமாக நான் சென்ற போது கிராமங்கள் மனித நடமாட்டமற்று கிடப்பதைக் கண்டேன்.

மீனவர்களின் படகுகள், வலைகள் நாசம் செய்யப்படுகின்றன. தப்பித் தவறி மீன் பிடித்து வந்தாலும் அவை கொள்ளையடிக்கப்படுகின்றன.

மருத்துவ மனை:-

யாழ் மருத்துவமனைக்கு சகல மருந்துகளையும் பிராணவாயு போன்றவை கொழும்புவிலிருந்துதான் வரவேண்டும். போக்குவரத்துத் தடையினால் அப்போது எதுவும் கொண்டு வர முடியவில்லை. அறுவை சிகிச்சைக்குத் தேவையான Gas Anethesian Anesthesia இல்லை எனவே அறுவை சிகிச்சை மட்டும் Spinal முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊரடங்குச்சட்டம் இருந்தபோது வெள்ளைக் கொடி போட்ட வாகனத்தில் கர்ப்பிணிப் பெண்ணைக் கொண்டு வந்தபோது இராணுவம் சுட்ட 2 பேர் சாவு. கர்ப்பிணிப் பெண் பலத்த காயம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



பயங்கர வாதத் தடைச் சட்டப்படி பிரேத விசாரணை அறிக்கையை உயர் நீதிமன்ற நீதிபதிக்கு மட்டுமே அனுப்பவேண்டும். இறப்புச் சான்றிதழ் (DEATH CERTIFICATE) கொடுக்கக்கூடாது.

இதன் விளைவாக இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் யாரும் இன்சூரன்ஸ் பணம் பெற முடியவில்லை.

கிராமப்புற மருத்துவ நிலையங்கள் அறவே இயங்குவதில்லை. மருந்துகள் இல்லை. டாக்டர்கள், நர்ஸ்கள் போன்றவர்கள் கூட இராணுவத்தாக்குதலுக்கு ஆளாவதால் வேலைக்கு வரப் பயப்படுகின்றார்கள். யாழ் போன்ற நகரங்களில் ஓரளவுக்கு மருத்துவ மனைகள் இயங்குகின்றன. டாக்டர்கள் தங்கள் சொந்தபொறுப்பில் இதைச் செய்கிறார்கள். பிரசவம் போன்றவற்றுக்குக்கூட கை மருந்துகளையே நம்ப வேண்டியுள்ளது.

டாக்டர்களுக்கும் சரிவரச் சம்பளம் கிடைப்பதில்லை.

<u>மின்சாரம்</u>:-

நகரங்களில் சில மணி நேரம் மட்டுமே மின்சாரம். கிராமங்களுக்கு மின்சாரம் அறவே கிடையாது.

<u>கல்வி நிலையங்கள்</u>:-

1983 முதல் கல்வி நிலையங்கள் பள்ளிகள், கல்லூரிகள் சரியாக நடைபெறவில்லை. ஆசிரியர்களுக்குச் சரிவர சம்பளம் இல்லை. கொழும்பு போய் வாங்க வேண்டும். அவ்வாறு போய் வருவது உயிருக்கே ஆபத்து. மாணவர்கள் வரும் பஸ்களை இராணுவம் மடக்கி ஏறிக்கொள்கிறது. அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு எல்லாம் போய்விட்டு பிறகு விடுவிக்கிறார்கள். காரணம் இராணுவத்தினர் தமது வாகனங்களில் செல்ல முடிவதில்லை. புலிகள் தாக்குகிறார்கள். எனவே மாணவர்களின் மறைவில் நடமாடுகிறார்கள்.

ஆசிரியர்கள், மாணவர்கள் பகிரங்கமாக சுடப்பட்டிருக்கின்றனர். ஆசிரியைகள் மாணவிகள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

தேர்வு நாளில் 60 மணி நேர ஊரடங்குச் சட்டம். தேர்வு எழுத முடியாத சூழ்நிலை.

½பகுதி மாணவர்கள் வருவதே அபூர்வம். நகரங்களில் உள்ள பள்ளிகளில் நிலைமை மேலும் மோசம்.

போலீஸ் காவல் நிலையங்களில் மணல் மூடைகளை அடுக்க ஆசிரியர்களை இராணுவம் கட்டாயப் படுத்தி வேலை வாங்குகிறது.

அரசு வழங்கும் இலவச புத்தகங்கள் தமிழ் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை வெளியிலும் கிடைப்பதில்லை.

விஞ்ஞான சோதனைச் சாலைகளில் எந்தச் சாமானும் இல்லை. சகல பொருட்களும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

கடிகாரங்கள் டெலிவிஷன், வீடியோ, டைப்ரைட்டர்கள் உட்பட சகல சாமான்களும் பறிமுதல்.

ஆசிரியர்கள் பற்றாக்குறை. காலியாக உள்ள இடங்கள் நிரப்பப்படுவதில்லை. புதிய கட்டிடங்கள் கட்டப்படுவது அறவே நிறுத்தப்பட்டுவிட்டது.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய சிங்கள ஆசிரியர்கள் தென்னிலங்கை சென்றுவிட்டார்கள். அவர்களுக்குக் காசோலை மூலம் ஊதியம் அனுப்பப்படுகிறது. ஆனால் தென்னிலங்கையில் பணியாற்றி அங்கிருந்து சிங்களர்களால் விரட்டியடிக்கப்பட்ட தமிழர்களான ஆசிரியர்கள் வேலையில் இருந்து நின்று விட்டவர்களாகக் கருதப்பட்டு ஊதியங்கள் மறுக்கப்பட்டுவிட்டன.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் கோவில்களிலும், மரத்தடிகளிலும் பாடம் பயில்கிறார்கள். தமிழர் கல்வியை அழிக்கவேண்டுமென்றே தைச் செய்தார்ளள்.

மொத்தத்தில் ஒரு தலைமுறையினரின் கல்வி அறவே பாதிக்கப்பட்டுவிட்டது.

<u>இந்துக் கோவில்கள்</u>:-

திருக்கேதீஸ்வரம் கோவில் கொடிக் கம்பம் வரை இராணுவம் மக்களை விரட்டிவந்து விட்டது. பூசைகள் சிரமத்துடன் நடக்கின்றன. யாத்திரிகர்கள் வரவு அடியோடு நின்று விட்டது.

மலைப் பகுதியில் உள்ள இந்துக் கோவில்களில் உள்ள குருக்கள் எல்லோரும் யாழ்ப்பாணம் திரும்பிவிட்டார்கள். அங்கு கோவில்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. கோவிலைச் சேர்ந்த மகாசிவராத்திரி மடம், திருஞானசம்பந்தர் மடம் போன்றவற்றில் அகதிகள் தங்கி இருக்கிறார்கள். கிளிநொச்சிப் பகுதியில் உள்ள அக்கராயன் குளம் வின்ன விநாயகர் கோவில் முற்றிலுமாக நாசம் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் உள்ள சித்தி விநாயகர் கோவில் கோட்டுவாசல் அம்மன் கோவில் வல்வெட்டுத்துறையில் உள்ள சிவன் கோவில் ஆகியவற்றுக்கு யாரும் போக முடியாது. நாசமாகியுள்ளன. அல்லது பூட்டிக்கிடக்கின்றன.

ஏராளமான சிறு கோவில்கள் சிதைக்கப்பட்டுக் கிடக்கின்றன. இந்தக் கோவில்களில் இராணுவம் அத்துமீறி அடிக்கடி நுழைகிறது. கோவில் மணியடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இராணுவ அனுமதி பெற்றபிறகே விசேஷநாட்களில் கோவில் மணி அபூர்வமாக அடிக்கப்படுகிறது. காலை 8 மணிக்குமேல் கோவில்கள் திறக்கப்பட்டு மாலை 3 மணிக்குள் மூடப்படுகின்றன. இரவு அர்த்தசாமப் பூசை கிடையாது. இராணுவ முகாம்களின் அருகே உள்ள கோவில்கள் திறக்கப்படுவதில்லை. மக்களும் செல்வதில்லை. கோவில் நகைகள், விக்ரகங்கள் உண்டியல்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

1983ல் இருந்து இதுவரை கோவில் குருக்கள் சுமார் 50 பேர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நல்லை திருஞான சம்பந்தர் மடத்திற்கும் இராணுவம் தீ வைத்தது. இந்து மதத் தலைவர்கள் விஸ்வ இந்து பரிஷத் தலைவர் யோகேந்திரா துரைசாமி தலைமையில் அரசிடம் முறையிட்டும் எந்தப் பயனும் இல்லை, அமைச்சர் இராசதுரையிடம் நேரிலும் மனுக்கள் மூலமும் புகார் செய்தும் எவ்வித பாதுகாப்பு இல்லை.

கோவில் குருக்களும், இந்துமத அமைப்புகளும் தமிழீழம் தவிர வேறு தீர்வு இல்லை என உறுதியாக நம்புகிறார்கள்.

<u>கிறிஸ்தவக் கோவில்கள்</u>:-

கிறிஸ்தவ தேவாலயங்களும் தாக்கப்படுகின்றன. குறிப்பாக பாதிரிமார்கள் தாக்கப்படுகிறார்கள். இவற்றிற்கு நடுவே பாதிரிமார்கள் அகதிகளுக்குப் பெரும் உதவி செய்துவருகிறார்கள்.

தமிழீழம் தவிர வேறு தீர்வு இல்லை என அவர்கள் கூறுகிறார்கள்.

பரப்பு கடந்தான் கர்த்தர் கோவிலை இராணுவம் சேதப்படுத்தியது. இது மன்னார் மாவட்டத்தில் 2 வது பெரிய கோவில். மார்கழி 18ஆம் கோவிலில் வழிபாடு நடந்தபோது உள்ளே புகுந்து 4பேரை சுட்டுக் கொன்றனர். 8 பேர்களை பிடித்துச் சென்றனர். அவர்கள் கதி இன்னும் தெரியவில்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



முஸ்லீம்கள் :-

முஸ்லீம்களும் தமிழீழத்திற்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். மன்னார், யாழ், மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லீம்கள் சிங்கள இராணுவத்தின் கொடுமைகளுக்கு ஆளான கதைகளைக் கூறினார்கள்.

முஸ்லீம் தொழுகைத் ஸ்தலங்களும் இராணுவத் தாக்குதலுக்குத் தப்பவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் தசுவாவி என்ற இடத்தில் முஸ்லீம் விவசாயிகள் 8 பேர்களை சிங்கள இராணுவம் சுட்டது. முஸ்லீம்கள் என்று சொன்னபோது "தமிழர்களை முதலில் ஒழித்து விட்டு அடுத்து உங்களைத்தான் ஒழிக்கப் போகிறோம்" என இராணுவ வீரர்கள் கூறினார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் சுட்டாலைச் சேனைப் பிரிவில் உள்ள பொன்னாவெளி கிராமத்தைச் சேர்ந்த முஸ்லீம்கள் விரட்டப்பட்டு அங்கு சிங்களவர் குடியேற்றப்படுகிறார்கள். ஊர்க்காவல்படை இதைச் செய்கிறது. 22.10.85ல் இது குறித்து ஜனாதிபதிக்கு முஸ்லீம்கள் தந்தி அனுப்பியுள்ளனர்.

மக்கள் மன நிலை :-

தமிழீழம் தவிர வேறு எதையும் ஏற்கத் தயாராக இல்லை. "எங்கள் தலைமுறை கஷ்டப்பட்டாலும் எங்களுக்கு அடுத்த தலைமுறையாவது சுதந்திரத்தை அனுபவிக்கட்டும்".

குடும்பத்தில் குறைந்தபட்சம் ஒருவரையாவது இழந்துள்ளனர். வீட்டிற்கு ஒரு பிள்ளையை புலிகள் இயக்கத்திற்கு மனமுவந்து தருகிறார்கள்.

மக்களில் பெரும்பாலோர் காட்டிக் கொடுப்பதில்லை. தங்கள் உயிர்களை விட போராளிகளின் உயிர்கள் முக்கியம் என்று கருதுகிறார்கள்.

போராளிகள் வெளியேற்றம் :-

இந்தியாவிலிருந்து 3 போராளிகளை வெளியேற்றிய விஷயத்தை தமிழ் மக்கள் இந்தியர்கள் கை விட்டுவிட்டதாக நினைக்கிறார்கள். மாணவ, மாணவிகள் நடுவில் இந்திய எதிர்ப்புணர்வு வளரத் தொடங்கியுள்ளது.

சிங்களர் மத்தியில் இந்த நடவடிக்கை பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. கிழக்கு மாநிலத்தில் சிங்களப்படைகள் தொடர்ந்து அக்கிரமங்கள் செய்வதற்கு இது தூண்டுதலாக அமைந்துவிட்டது.

சமரசப் பேச்சு :-

டில்லி நடத்தும் சமரசப் பேச்சுக்களில் மக்களுக்கு நம்பிக்கையில்லை. போர் நிறுத்தம் என்ற பெயரில் சிங்கள அரசு தன்னை மேலும் பலப்படுத்திக் கொள்கிறது. ஹெலிகொப்டரில் இருந்து அகதிகள் முகாம் மீது சுடுபவர்களும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மீது வெடிகுண்டு வீசுபவர்களும் போர் நிறுத்தத்தை எப்படி அமுல் நடத்த முடியும்? என்று தமிழ் மக்கள் கேட்கிறார்கள்.

இந்திரா பாதையிலிருந்து ராஜீவ் விலகிச் செல்வதாக மக்கள் கருதுகிறார்கள்.

இந்தியா இப்பிரச்சனையில் தமிழர் பக்கம் சாராமல் நடுநிலை வகிக்கச்செய்ய வேண்டும் என்பதுதான் ஜெயவர்த்தனாவின் திட்டம். அதற்குராஜீவ் இசைந்துவிட்டார்.

காலம் கடக்கக் கடக்க தமிழர் பலம் குறையும், போராளிகள் பலவீனம் அடைவார்கள். தமிழர்களின் பொருளாதார பலத்தை அழித்து அவர்களின்போராடும் சக்தியைக் குறைக்க ஜெயவர்த்தனா முயலுகிறார். இந்தச் சதிக்கு இந்தியா துணைபோகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



ஜெயவர்த்தனவை வீழ்த்தும் பலம் எந்த சிங்களக் கட்சிக்கும் இப்போது இல்லை. எனவே ஜெயவர்த்தனவை தனது ஆதரவாளராக வைத்துக் கொள்ள இந்தியா முயலுகிறது. ஆகவேதான் தமிழருக்கு ஆதரவற்ற போக்கில் நடந்து கொள்கிறது.

இப்போதுள்ள இலங்கை அரசியல் சட்டத்திற்குட்பட்ட ஒரு தீர்வைத்தான் தமிழருக்கு வழங்க தான் கூறுவதாக இலங்கை அரசுத் தலைவர்களிடமும், இந்தியாவில் உள்ளது போன்ற மாநில உரிமை வழங்க தான் வற்புறுத்துவதாக தமிழர் தலைவர்களிடமும் ராஜீவ் கூறுவது முன்னுக்குப் பின் முரணானதாகும்.

ஏனென்றால் இலங்கை அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் இந்திய மாநிலத்திற்குள்ள உரிமை போன்றதொன்றை தமிழர்களுக்கு வழங்கவே முடியாது.

இந்தியா உதவாவிட்டால் அடிமைத்தனத்தோடு கூடிய சாவு நிச்சயம். அவ்வாறு சாவதைக் காட்டிலும் விடுதலைக்காகப் போராடிச் சாவது மேல் என்று பெரும்பாலான தமிழர்கள் கருதுகிறார்கள்.

இந்தியாவில் உள்ள தமிழர்கள் ஒன்றுபட்டு நின்று இந்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று தமிழீழ மக்கள் விரும்புகிறார்கள்.

பயங்கரவாதிகளை ஓராண்டில் அடக்குவதாகக் கூறும் தைரியம் ஜெயவர்த்தனாவிற்கு வந்ததற்கு இந்தியாவின் போக்குத்தான் காரணம்.

உலகில் எந்த நாடும் இதுவரை இலங்கைக்கு இலவசமாக ஆயுதம் தரமுன் வரவில்லை. அதை இந்தியா ஆட்சேபிக்கும் என்ற காரணத்தால் கொடுக்கத் தயங்கின. இப்போது இந்திய அரசு ஆட்சேபிக்காது என்று நினைப்பதால் இனி ஆயுதங்கள் இலவசமாகக் கிடைக்கும்.

நேபாளம், பூடான், சிக்கிம் போன்றவற்றிற்கு மறுபுறம் சீனா இருப்பதால் இச்சிறிய நாடுகளுக்கு இந்தியா போட்டி போட்டுக் கொண்டு உதவுகிறது. ஆனால் தமிழீழம் அருகே இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் இல்லாததால் இந்தியா அலட்சியம் காட்டுகிறது என்று கூறுகிறார்கள்.

இராணுவ ஆட்சி:-

இலங்கை இராணுவம் மேலும், மேலும் பலம் பெறுவது உள்நாட்டில் ஜனநாயகத்தை அழித்து இராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் என்ற அச்சம் சிங்களர் நடுவில் எழுந்துள்ளது. ஆனால் தமிழருக்கு எதிரான இனவெறி மேலோங்கி நிற்பதால் இது எடுபடவில்லை.

ஆசியாவிலேயே, அதிக வெளிநாட்டு உதவி பெறும் நாடாக இலங்கை உள்ளது. இந்த உதவியை ஆயுதங்கள் வாங்கிக் குவிக்க இலங்கை பயன்படுத்துகிறது.

இந்திய எதிர்ப்பு:-

ஜாதிய விமுக்தி பெரமுன, ரோஹன விஜய வீராவின் ஜனதா விமுக்தி பெரமுன ஆகிய சிங்கள இயக்கங்கள் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தீவிரமாக நடத்தி வருகின்றன. புத்தமத குருமார்களும் அமைப்புகளும் தீவிர இந்திய எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

விமானத் தாக்குதல் பீதி:-

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து தமிழர்கள் விரட்டப்பட்டு யாழ்ப்பாணத்தில் வந்து குவிகிறார்கள். திடீரென விமானத்தாக்குதல் தொடுத்து தமிழர்களை அழிக்கும் திட்டத்துடன்தான் அகதிகள் யாழ்ப்பாணத்தில் குவிய அரசு அனுமதிக்கிறது என்ற அச்சம் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



## கிரிக்கெட் குழு:-

தமிழர்கள் படுகொலை செய்யப்படும் வேளையில் இந்திய கிரிக்கெட் குழு இலங்கையில் சிங்களரோடு விளையாடியது தமிழர்கள் மனதில் ஆழமான வடுவை ஏற்படுத்தியுள்ளது. தங்களுக்கு எதிரான செயலாகத் தமிழர்கள் இதைக் கருதுகிறார்கள்.

ஆனால் அதே வேளையில் சிங்களர்கள் இந்தியக் குழுவினரை ஏளனம் செய்தும் அவமதித்தும் தங்கள் வெறுப்பைப் பகிரங்கமாய் வெளிக்காட்டினர்.

ஈழத் தமிழர்கள் தங்கள் போராட்டத்தில் தோற்பார்களேயானால் இலங்கை முழுமையான இந்திய எதிர்ப்பு நாடாக மாறிவிடும். ஆனால் தமிழர்கள் ஒருபோதும் இந்திய எதிர்ப்பு நிலை எடுத்ததில்லை. இனியும் எடுக்க மாட்டார்கள்.

இந்தியாவின் உதவியை மட்டுமே தமிழர்கள் நாடுகிறார்கள். ஆனால் ஒருபோதும் இந்தியாவின் எதிரி நாடுகளான பாகிஸ்தான், சீனா போன்றவற்றின் உதவியை ஈழத் தமிழர் நாடவில்லை. ஆனால் தமிழரை ஒழிக்க பாகிஸ்தான் சீனா போன்ற நாடுகளின் உதவியைப் பெற இலங்கை தயங்கவில்லை.

## மலரும் மக்கள் போராட்டம்:-

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு மக்கள் போராட்டமாக மலர்ந்து கொண்டிருக்கிறது.

இராணுவக் கொடுமையால் பாதிக்கப்படாத தமிழர் குடும்பம் இல்லை. எனவே மக்கள் இப்போராட்டத்தின் பின்னே அணி திரண்டு வருகின்றனர். அவர்களைத் திரட்டும் பணியில் விடுதலைப் புலிகள் மகிழ்கின்றனர்.

அரசு நிர்வாகம் சீர் கெட்ட நிலையில் கிராமம்தோறும் இயக்க சபைகள் சுகாதார சபைகள் போன்றவற்றை எதிர்த்துப் போராடி பாதுகாக்கிறார்கள்.

மக்களுக்குத் தேவையான நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், சோப்பு பழரசங்கள், ஊறுகாய், அச்சாறு, பப்படம், ஐஸ்வரிசி, கற்பூரம், ஊதுபத்திகள் கடலைவருவல், கேழ்வரகு மாவு, அரிசி மாவு, பாம்பு தடி, தயிர் தரைவிரிப்பு போன்றவற்றை உற்பத்தி செய்கிறார்கள்.

நியாய விலைக் கடைகள் மூலம் நியாய விலைக்கு மக்களுக்கு விற்கிறார்கள்.

பன்றிப் பண்ணை, கோழிப்பண்ணை போன்றவை நடத்துகிறார்கள்.

"கசிப்பு" என்படும் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்க பொது மக்களின் ஒத்துழைப்போடு ஏற்படுத்தி வருகிறார்கள். சிவில் நிர்வாகம் செயலற்ற நிலையில் இந்த அமைப்புகள் அதை ஏற்று நடத்துகின்றன.

விவசாயிகளுக்கு பலவிதத்திலும் உதவுகிறார்கள். விதைகள், உரங்கள் தந்து விவசாயம் செய்யத் தூண்டுகிறார்கள். குளங்களையும், வாய்க்கால்களையும் சிரமதான முறையில் மக்கள் ஒத்துழைப்போடு சீரமைக்கிறார்கள்.

பயிர்களை அழிக்க இராணுவம் முற்படும்போது எதிர்த்து போராடி பாதுகாக்கிறார்கள்.

அகதிகள் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டு உதவுகின்றனர். கல்வி நிலையங்கள் இயங்காத நிலையில் ஒற்றையாசிரியர் பள்ளியைத் திறந்து பாடம் சொல்லித் தருகின்றனர்:

யாழ்ப்பாணத்தில் சகல இயக்கங்களும் ஆளுக்கொரு சாலையை செப்பனிடும் வேலையை மேற்கொண்டு செப்பனிட்டுள்ளனர்.

நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் இரவு பகலாகப் பாதுகாவல்புரிகின்றனர். பல நடவடிக்கைகள் எடுகின்றார்கள்.

திருமணம், பூப்பு சாந்தி போன்ற சடங்குகளை ஆடம்பரமின்றி நடத்தப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



பழந்தமிழர் கலைகளான வில்லுப்பாட்டு, பொய்க்கால் குதிரையாட்டம் தெருக்கூத்து போன்றவற்றிற்குப் புத்துயிரும், புதுவடிவமும் கொடுத்து நடத்துகிறார்கள்.

பொதுமக்களின் உயிர்களையும், உடமைகளையும் காக்கும் காவலர்களாக மட்டுமல்ல சேவகர்களாகவும் பணியாற்றுகிறார்கள்.

<u>எமது யோசனைகள்</u>:-

1. இலங்கையில் தமிழர் பகுதிகளில் உள்ள லெட்சக்கணக்கான அகதிகள் போதுமான உணவு உடை இல்லாமல் செத்து மடிகிறார்கள். மாற்றுடை இல்லாமல் பெண்கள் தவிக்கிறார்கள். தொற்று நோய்களால் குழந்தைகள் சாகின்றன.

செஞ்சிலுவைச்சங்கம் அல்லது அதுபோன்ற சர்வதேச அமைப்புகளின் மூலம் அகதிகளுக்கு உதவ அவசர நடவடிக்கைகள் இந்திய அரசு எடுக்க வேண்டும். அல்லது விடுதலைப் புலிகளின் அகதி உதவி அமைப்பான டி.ஆர்.ஓ., டி.ஆர்.ஆர்.ஏ. சர்வோதயம் இராமகிருஷ்ண மிஷன், கத்தோலிக்க திருச்சபை போன்ற அமைப்புகள் மேற்கொண்டிருக்கும் அகதிகள் புனர்வாழ்வு வேலைகளுக்கு மத்திய மாநில அரசுகள் நிதிகளிலிருந்து உதவ வேண்டும்.

2. தமிழர் பகுதிகளில் மருத்துவ நிலையங்கள் இயங்காததால் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் சார்பில் டாக்டர்கள் குழுவொன்றை உடனடியாக அனுப்ப வேண்டும்.

3. இலங்கையில் உள்ள நிலவரத்தை நேரில் அறிய இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களும், தமிழக சட்டமன்ற உறுப்பினர்களும் அடங்கிய சர்வ கட்சிக் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பப்படவேண்டும். ஏற்கனவே பிரிட்டன், அவுஸ்திரேலியபாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுக்களை கலவரப்பகுதிகளில் பார்வையிட இலங்கையரசு அனுமதித்துள்ளது

4. இந்திய கடற்கரைக்கு மிக அருகில் புதிய கடற்படைத்தளங்களை இலங்கை உருவாக்கி வருகிறது. யாழ்ப்பாணம் அருகில் காரை நகரில் ஏற்கனவே உள்ள கடற்படைத்தளம் பெரிதாக விரிவுபடுத்தப்படுகிறது. இது தவிர தற்போது மன்னாரில் பிரமாண்ட நவீன கடற் தளம் வெகு வேகமாக உருவாக்கப்பட்டு வருகிறது. இது இந்தியப் பாதுகாப்புக்கு விடப்பட்டுள்ள சவாலாகும்.

5. தூத்துக்குடியில் அல்லது தென் தமிழ்நாட்டில் உடனடியாகக் கடற்படைத்தளம் ஒன்று அமைக்கப்பட்டாக வேண்டும்.

6. தெற்கே இருந்து வரும் ஆபத்தைச் சமாளிக்கும் வகையில் இந்தியக் கடற்படையின் தலைமைத்தளம் பம்பாயிலிருந்து தமிழ்நாட்டிற்கு மாற்றப்படவேண்டும்.

7. இந்துமா கடல் பகுதியில் நமது வலிமை பெருக்கப்படவேண்டும்.

8. தமிழீழப் பகுதியில் விவசாயம் சீர்குலைக்கப்பட்டதன் விளைவாக உணவு உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. சில மாதங்களில் கடும் பஞ்சம் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. அதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிகின்றது. இந்த அபாயத்திலிருந்து தமிழ் மக்களை காக்க இந்திய அரசு உதவ வேண்டும்.

9. தமிழீழ மக்கள் உற்பத்தி செய்யும் கருவாடு, உருளைக்கிழங்கு வெங்காயம் மிளகாய் போன்ற பொருட்களை வாங்காமல் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை சிதைக்கும் இலங்கை அரசு அதே பொருட்களை தமிழ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்கிறது. எனவே இந்தியாவிலிருந்து எந்தப் பொருளும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது.

தொடர்ச்சி மறுபக்கம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்

Printed by Grafton Litho Ltd (TU), 5B Old Town, London SW4 0JT

https://tamileelamarchive.com/

..2ம் பக்கத்தொடர்ச்சி. 

**பதில்:** மகத்தான காங்கிரஸ் பாரம்பரியத்திலிருந்து வந்தவன் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனல், இந்தப் பிரச்சினையை காங்கிரஸ் அரசு எந்த அளவுக்கு உணரவேண்டுமோ அந்த அளவுக்கு உணரவில்லை. இலங்கைப் பிரச்சினையில் ஒத்தகருத்துடைய கட்சிகள் எல்லாம் சேர்ந்து போராடுவதுதான் 'டெசோ' அமைப்பின் நோக்கம். இதில் காங்கிரஸ் கட்சியும் ஒத்துப்போனல் அவர்களையும் சேர்த்துக் கொண்டு நாங்கள் போராடத் தயங்க மாட்டோம்.

**கேள்வி 9:** மறைந்த பிரதமர் இந்திரா காந்தி இந்த பிரச்சினையை அணுகிய விதத்திற்கும், ராஜீவ் காந்தி அணுகுகிற விதத்திற்கும் என்ன வேற்றுமை காண்கிறீர்கள்? பஞ்சாப், அஸ்ஸாம் போன்ற பிரச்சினைகளைத் தீர்த்த ராஜீவிற்கு, இதில் தீர்வுகாண காலதாமத மாகிறதே. ஏன்?

**பதில்:** இந்திரா காந்தி இந்த பிரச்சினையைப் புரிந்து கொண்ட அளவிற்கு ராஜீவ் காந்தி புரிந்து கொள்ளவில்லை. தமிழர் பிரச்சினையை இயற்கையிலேயே ஒரு தமிழன் உணரும் அளவிற்கு பண்டாரி போன்றவர்களால் உணர முடியாது. அதனுல்தான் இந்திரா காந்தி அம்மையார்— ஜி. பார்த்தசாரதி, அப்போது வெளிநாட்டு மந்திரியாக இருந்த நரசிம்மராவ் போன்ற தென்னுட்டவர்களின் ஆலோசனையை ஏற்று நடந்தார். பண்டாரி என்ன செய்ய முடியும்? அங்கே சொல்வதை இங்கே சொல்வார்; இங்கே சொல்வதை அங்கே சொல்வார். விஷயங்களை நுட்பமாக அலசக் கூடிய பார்த்தசாரதி போன்ற ஆலோசகர்கள் இல்லாததால்தான் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் காலதாமதமாகிறது. ராஜீவ் காந்தி அதை உணர வேண்டும்.

**கேள்வி 10:** இந்தியாவில் காலிஸ்தான் வேண்டும் என்று கூறி சவுகான் போன்ற சீக்கியர்கள் லண்டனில் இருந்து போராடி வருகிறர்கள். அதைப்போல, இலங்கையில் தமிழ்ஈழம் வேண்டும் என்று சிலர் இந்தியாவிலேயே இருந்து கொண்டு போராடி வருகிறர்கள்.. தமிழ்ஈழத்தை ஆதரிக்கும் நீங்கள், காலிஸ்தானையும் ஆதரிப்பீர்களா?

**பதில்:** இந்தியாவில் ஒரு சீக்கியர் ஜனதிபதியாக இருக்க முடிகிறது. ஆனல், இலங்கையில் ஒரு தமிழன் கனவில்கூட ஜனதிபதியாக முடியாது. இந்திய இராணுவத்தில் சீக்கியர்கள் பெரிய பதவிகள் எல்லாம் வகிக்கிறர்கள். ஆனல், இலங்கையிலுள்ள இராணுவத்தில் ஒரு தமிழன்கூட கிடையாது: இவை இரண்டையும் ஒற்றுமைப்படுத்தி பார்ப்பதே தவறு!

15ம் பக்கத்தொடர்ச்சி 

10. திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் தமிழர் படுகொலை செய்யப்படுவதையும் விரட்டி அடிக்கப்படுவதையும் உடனே நிறுத்துமாறு இலங்கைஅரசை இந்தியா எச்சரிக்கவேண்டும். இதைச் செய்ய இந்திய அரசு சக்தியற்று இருக்குமானால் அதன் மீது தமிழர்கள் நம்பிக்கையிழந்துவிடுவார்கள்.

11. தமிழீழத்தின் பிற பகுதிகளில் இருந்து யாழ்ப்பாண பகுதியில் அகதிகள் குவிந்து வருகிறார்கள். யாழ்ப்பாணம் மீது விமானத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த அச்சத்தைப் போக்க இலங்கை அரசிடம் உறுதி மொழி பெறப்படவேண்டும்.

12. அன்னிய ஆயுதங்களைக் குவிப்பதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்புக்கே சவால் விடும் நிலையை இலங்கை உருவாக்கி வருகிறது. இந்துமாக் கடலில் புதிய போர் மண்டலமாக்க இலங்கை முயன்றுவருகிறது என்ற உண்மைகளின் அடிப்படையிலும் மனித உரிமைகள் நசுக்கப்படுவதையும் திட்டமிட்ட இனப்படுகொலை நடைபெறுவதைத் தடுக்கவும் இந்திய மக்கள் அனைவரையும் தமிழீழ மக்களுக்கு ஆதரவாகத் திரட்ட முயற்சிகளை தமிழக அரசியல் கட்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

13. பாலஸ்தீனிய, நமீபிய விடுதலைப் போராட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதைப் போல் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்க இந்திய அரசு முன் வர வேண்டும்.

நெடுமாறன்.


## தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்

VOICE OF LIBERATION TIGERS

தமிழீழத்தில் நடைபெறும் சம்பவங்கள் பற்றிய ஊர்ஜிதப்படுத்தப்பட்ட செய்திகளுக்கு "தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்" செய்திச் சேவையுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. 01-475 0543







தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பிரித்தானிய கிளையினது சகல விதமான தபால் தொடர்புகள் கீழ்க்கண்ட முகவரிக்கே மேற்கொள்ளுமாறும், விடுதலைப் புலிகளுக்கான நன்கொடைத் தொகைகளோ, அங்கத்துவப் பணங்களோ, அன்பளிப்புகளோ விடுதலைப் புலிகளின் பிரசுரங்களின் கொடுப்பனவுகளோ, SOLT இற்கு அனுப்பும்போது, காசோலைகளை SOLT என்ற பெயரிற்கே அனுப்பிவைக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

SOLT (U.K.)
258 GREEN STREET
LONDON E7 8LF UNITED KINGDOM
TEL: 01-475 0356


"இனியொரு விதி செய்வோம்......"

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்!

தமிழீழ ஆவணக்காப்பகம்